மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
Provincial Department of Education, Northern Province

# முதலாம் தவணைப் பரீட்சை – 2024

| தரம் - 12(2025) | கர்நாடக சங்கீதம் | நேரம்: 3.00 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..........................................................................................

மேலதிக வாசிப்பு நேரம்:10 நிமிடங்கள்

## பகுதி - I

❖ பொருத்தமான விடையினைத் தெரிவு செய்து, விடைத்தாளில் புள்ளடி (x) இடுக.

01. ஜனக இராகங்களின் எண்ணிக்கை
(1) 7 (2) 12 (3) 16 (4) 72 (5) 36

02. "ஞானம் அருள்வாய்......................." என்ற மந்திரம் காலக் கீர்த்தனை அமைந்துள்ள இராகம்
(1) பந்துவராளி (2) ஹம்ஸத்வனி (3) மோகனம் (4) ஹிந்தோளம் (5) ஆபோகி

03. தமிழில் பஞ்சதாள சூளாதியை இயற்றியவர்
(1) புரந்தரதாஸர் (2) திருப்பதி அன்னமாச்சாரியார்
(3) கலாநிதி. கே. பொன்னையாபிள்ளை (4) ஷேத்ரக்ஞர்
(5) வெங்கடமகி

04. சண்முகப்பிரியா இராகத்தின் கிரஹ ஸ்வரங்கள்
(1) ஸ, ப (2) ரி, ம, ப (3) ரி, க, ம, நி (4) ஸ, ம (5) க, ம

05. "மாதவர் பணிக பாலி....." என்ற சரணத்தைக் கொண்ட வர்ணம்
(1) முருகா........... (2) இன்னம் என் மனம்.......... (3) வலச்சி..........
(4) உனையன்றி.......... (5) தஞ்சம் என்றாவே.......

06. கடம் வாசித்துப் பிரபல்யடைந்தவர்
(1) T.S மணிஐயர் (2) மைசூர். ஸ்ரீ. சீதாராமையர்
(3) பழனி சுப்பிரமணிய பிள்ளை (4) விநாயகராம்
(5) சென்னை பக்கிரிசாமி

07. 1813 - 1846 வரையான காலப்பகுதியில் வாழ்ந்த வாக்கேயகாரர்
(1) பைடால குருமூர்த்தி சாஸ்திரிகள் (2) அருணகிரிநாதர் (3) ஸ்வாதித் திருநாள் மகாராஜா
(4) வெங்கடமகி (5) சாரங்கதேவர்

08. ஆ: ஸகமதநிஸ்
அ: ஸ்நிதமகரிஸ என்ற ஆரோகண, அவரோகணத்தினை உடைய இராகம்
(1) வசந்தா (2) ஹிந்தோளம் (3) ஆபோஹி (4) ஸ்ரீரஞ்சினி (5) மோகனம்

09. தா, ததரினம், தோம் போன்ற சொற்களுடன் பாடப்படுவது
(1) கற்பனாஸ்வரம் (2) பல்லவி (3) நிரவல்
(4) தானம் (5) இராக ஆலாபனை



kalvi.lk

10. அருணாசல் கவிராயரால் இராம நாடகக் கீர்த்தனை இயற்றப்பட்ட நூற்றாண்டு?
(1) 16ஆம் நூற்றாண்டு (2) 17ஆம் நூற்றாண்டு (3) 18ஆம் நூற்றாண்டு
(4) 19ஆம் நூற்றாண்டு (5) 20ஆம் நூற்றாண்டு

11. ஆபோஹி இராகத்தின் தாய் இராகம்
(1) கரஹரப்பிரியா (2) ஹரிகாம்போதி (3) சங்பராபரணம்
(4) கல்யாணி (5) தோடி

12. "வலச்சி......" என்ற நவராக மாலிகா வர்ணத்தினை இயற்றியவர்
(1) ஸ்வாதி திருநாள் மகாராஜா
(2) இராமநாதபுரம் ஸ்ரீனிவாசயங்கார்
(3) தியாகராஜ ஸ்வாமிகள்
(4) பட்டணம் ஸுப்ரணியய்யர்
(5) பாபநாசம் சிவன்

13. உடும்புத் தோல் ஒட்டப்பட்ட வாத்தியம்
(1) தபேலா (2) பறை (3) கெஞ்சிரா (4) தவில் (5) மிருதங்கம்

14. சண்முகப்பிரியா இராகத்தின் நேர் சுத்த மத்திம இராகம்
(1) கரஹரப்பிரியா (2) கௌரிமனோகரி (3) கீரவாணி
(4) தோடி (5) நடபைரவி

15. "சலமேல..........." என்ற அடதாள வர்ணத்தில் காணப்படும் அணி
(1) ஸ்வராட்சரம் (2) மணிப்பிரவாளம் (3) யமகம்
(4) மகுடஸாகித்தியம் (5) சங்கதி

16. ஷாடவ - ஷாடவ இராகத்திற்கு ஒரு உதாரணம்
(1) ஆபோஹி (2) நாட்டைக்குறிஞ்சி (3) ஜகன்மோகினி
(4) மலயமாருதம் (5) கருடத்வனி

17. "மக்சா சாய்" என்ற விருது பெற்ற இந்திய இசைக் கலைஞர்
(1) பட்டம்மாள்
(2) எம். எஸ். சுப்புலட்சுமி
(3) ஸீதா ரகுநாதன்
(4) நிர்மலா ஸ்ரீனிவாசன்
(5) ஜீ. என். பாலசுப்பிரமணியம்

18. ஆதி தாள வரண்த்தில் முதலாம் காலம் பாடும் போது ஒரு ஆவர்த்தனத்தில் எடுத்துக் கொள்ளும் மொத்த அட்சரம்
(1) 8 (2) 16 (3) 32 (4) 56 (5) 64

19. "பாஹிமாம் ஸ்ரீ ...................." என்ற சௌக்க காலக் கிருதி அமைந்துள்ள இராகம்
(1) ரஞ்சினி (2) சிவரஞ்சினி (3) ஸ்ரீரஞ்சினி
(4) மாரரஞ்சினி (5) ஜனரஞ்சினி

20. "வலச்சி......." என்ற வர்ணத்தின் முக்தாயிஸ்வரம் அமைந்துள்ள இராகங்கள்
(1) கல்யாணி, பேகட
(2) கேதாரம், சங்கராபரணம்
(3) கல்யாணி, சங்கராபரணம்
(4) காம்போஜி, யதுகுலகாம்போதி
(5) மோகனம், ஸ்ரீராகம்



kalvi.lk

## பகுதி II

❖ "அ" பகுதியிலுள்ள எல்லா வினாக்களுக்கும், "ஆ" பகுதியிலுள்ள ஒரு வினாவிற்கும், "இ" பகுதியிலிருந்து மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

### "அ"- பகுதி

01. (i) திசி - ஸ்ரீ என்னும் மேள சங்கத்தினால் குறிக்கப்படும் இராகம்.
   (ii) பாக்கின் தந்தை பெயரினைக் குறிப்பிடுக.
   (iii) "தஞ்சம்" என்ற வர்ணத்தை இயற்றுபவர் யார்?
   (iv) யமன் கல்யாண், பூர்வி போன்ற புதிய இராகங்களை உருவாக்கிய ஹிந்துஸ்தானி வாக்கேயகாரர்.
   (v) ஏக அந்நிய ஸ்வர பாஷாங்க இராகத்திற்கு ஒரு உதாரணம்.
   (vi) சுருதி நிர்ணயிக்கப்பட்ட துணைத்தாள வாத்தியத்தினைக் குறிப்பிடுக.
   (vii) புராண படனம் இசைக்கப்பட்ட நூற்றாண்டு.
   (viii)"ஞானம் அருள்வாய்...................." எனற் கீர்த்தனையின் சரணம் ஆரம்பிக்கும் எடுப்பு.
   (ix) ஸ்வாதித் திருநாள் மகாராஜாவின் முத்திரைகள் இரண்டினைக் குறிப்பிடுக.
   (x) ஜனக இராகத்தின் நான்கு இலட்சணங்களையும் தருக.

(12 புள்ளிகள்)

### "ஆ"- பகுதி

02. (i) வக்ர இராகம் என்றால் என்ன? (02 புள்ளிகள்)
   (ii) வக்ர இராகத்தின் மூன்று பிரிவுகளையும் உதாரணத்துடன் விளக்குக. (06 புள்ளிகள்)
   (iii)ஔடவ, ஷாடவ, சம்பூர்ண பேதங்களினால் உருவான வர்ஜ இராகப் பிரிவுகளை உதாரணத்துடன் தருக. (04 புள்ளிகள்)

03. பின்வரும் உருப்படிக்கு இலட்சணம் தருக.
   (i) சூளாதி (12 புள்ளிகள்)

### "இ"- பகுதி

04. பின்வரும் இராகங்களுள் ஒன்றிற்கு இலட்சணம் எழுதுக.
   (i) சண்முகப்பிரியா
   (ii) 17 ன் ஜன்னியமான ஔடவ ஷாடவ இராகம் (12 புள்ளிகள்)

05. (i) வயிற்றுடன் அணைத்தக் கொண்டு வாசிக்கப்படும் வாத்தியத்தின் அமைப்பினை விளக்குக. (04 புள்ளிகள்)
   (ii) இவ் வாத்தியத்தின் படத்தினை வரைந்து, பாகங்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)
   (iii)கெஞ்சிரா வாத்தியத்தின் வாசிக்கும் முறையினைனக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)
   (iv)இவ் வாத்தியம் வாசித்துப் பிரபல்யமடைந்த இரு கலைஞர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

06. (i) ஸ்வாதித் திருநாள் மகாராஜாவின் வரலாற்றினை விளக்குக. (06 புள்ளிகள்)
   (ii) இவரது இசைத் தொண்டினை விளக்குக. (06 புள்ளிகள்)

07. நீர் கற்றுக் கொண்ட ஆதி தாள வர்ணத்தின் பூர்வாங்கம் பகுதியினை இராக, தாள, அங்க, அடையாளங்களுடன் எழுதுக. (12 புள்ளிகள்)

08. இலங்கையின் இசை வளர்ச்சி பற்றி விளக்குக. (12 புள்ளிகள்)



kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page